# வெற்றிடங்கள்

## தேசிய கல்வி நிறுவனம்

தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024 ஜூலை 01ஆம் திகதி அல்லது அதற்கு முன் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவனம், த.பெ. இல. 21, மஹரகம எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் தயவு செய்து பதிவுத் தபாலில் அனுப்பவும். பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் மேலதிக விபரங்களை www.nie.ac.lk இணையதளத்தில் "News & Events" பிரிவிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் புறத்தில் விண்ணப்பிக்கும் பதவியை தயவுசெய்து குறிப்பிடவும்.

**பதவிகள்** : 01. பணிப்பாளர் (ஆங்கில மொழி)
02. பணிப்பாளர் (அச்சிடல் மற்றும் பிரசுரங்கள்)

**சேவை வகுதி** : சிரேஷ்ட முகாமையாளர் (HM 1-1)

**பொதுவான நிபந்தனைகள்**

- பிறப்புச்சான்றிதழ், கல்வி / தொழில்சார் சான்றிதழ்கள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- அரச துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.
- இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) தமது சம்பளத்தின் 8% பங்களிப்புச் செய்தல் வேண்டும் மற்றும் நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% பங்களிப்பு செய்யும்.
- அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக, தொழில்சார் கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு, ஆராய்ச்சி கொடுப்பனவு மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவனம்.**